**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

வேளாண்மைப் பொறியியல் - 100 புதிய உழுவைகள் மற்றும் உபகரணங்கள் தமிழ்நாடு வேளாண் பொறியியல் மற்றும் பணிக்கூட்டுறவு இணையத்தின் மூலம் தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலிருந்து கடன் மூலம் வாங்குவது தொடர்பாக - ஆணை வெளியிடப்படுகின்றது.

---

**வேளாண்மை (வே.பொ1 ) துறை**

**அரசு ஆணை (நிலை) எண்.250**

**நாள்.11..7.2000**

**படிக்க:**

தலைமைப் பொறியாளர் (வே.பொ) கடித எண்.ட்டி2/28477/99 நாள்.26.7.99.

---

ஆணை:

வேளாண்மைத் துறையின் மானியக் கோரிக்கையின்போது 5.4.99 அன்று சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் ரூ.300/- இலட்சம் மொத்தச் செலவினத்தில் 100 உழுவைகள் (Tractors) மற்றும் உபகரணங்கள், விவசாயிகளின் உபயோகத்திற்காக வாங்கப்படும் என அறிவித்தார். இவ்வறிவிப்பின் அடிப்படையில் தலைமைப் பொறியாளர் (வே.பொ) ரூ.300/- இலட்சம் செலவில் 100 உழுவைகள் மற்றும் உபகரணங்கள் வாங்க அரசிற்கு செயற்குறிப்பு அனுப்பியுள்ளார்.

2. தலைமைப் பொறியாளர் (வே.பொ)வின் செயற்குறிப்பினை அரசு தீர ஆராய்ந்து ஏற்றது.. அதன் அடிப்படையில் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு வேளாண் பொறியியல் மற்றும் பணிக்கூட்டுறவு இணையம் 100 புதிய உழுவைகள் மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்கு

அடிப்படை வட்டி விகிதத்தில், தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் ரூ.300/- இலட்சம் கடன் பெறுவதற்கு அனுமதிக்கப்படுகிறார். இந்த இயந்திரங்கள் வேளாண்மைப் பொறியியல் துறைக்கு குத்தகை மற்றும் விற்பனையின் அடிப்படையில் வழங்கப்படவேண்டும்.

3. தேசியமயமாக்கப்பட்ட வங்கிக்கு வரையறுக்கப்பட்ட படிவத்தில் அரசு சார்பில், உத்திரவாத ஒப்பாவனம் அளிக்கும்படி மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு வேளாண் பொறியியல் மற்றும் பணிக்கூட்டுறவு இணையம் கேட்டுக் கொள்ளப்படுகிறார். அவர் நிலுவையில் உள்ள உத்திரவாதத் தொகைக்கு வருடந்தோறும் உத்திரவாத தரகு சதவிகிதத்தை அரசிற்கு செலுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார். மேற்கண்ட உத்திரவாத தரகு தமிழ்நாடு வேளாண் பொறியியல் மற்றும் பணிக்கூட்டுறவு இணையத்திற்கு வாடகை மூலம் கிடைக்கும் வருவாயிலிருந்து திரும்பச் செலுத்துமாறு தலைமைப் பொறியாளர் (வே.பொ) கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. இவ்வியந்திரங்களின் வாடகை மூலம் கிடைக்கும் வருவாயிலிருந்து, கடனைஏழு ஆண்டுத் தவணைகளில் தமிழ்நாடு வேளாண் பொறியியல் மற்றும் பணிக்கூட்டுறவு இணையத்தின் மூலம் திரும்பச் செலுத்தும்படி தலைமைப் பொறியாளர் (வே.பொ) அறிவுறுத்தப்படுகிறார்.

5. தற்போது காலியாக உள்ள 148 உழுவை ஓட்டுநர்கள் மற்றும் துடைப்பாளர் பதவிகளை சரண் செய்யும்படி தலைமைப் பொறியாளர் (வே.பொ) அறிவுறுத்தப்படுகிறார். வேளாண்மைப் பொறியியல் துறையில் பணியில் இருக்கும் உழுவைகள் மற்றும் மண் தள்ளும் இயந்திரங்களின் எண்ணிக்கை கருத்தில் கொண்டு, மீதமுள்ள 494 உழுவைஓட்டுநர்கள் மற்றும் துடைப்பாளர்களுக்கு பணி நீட்டிப்பு மறு ஆய்வு செய்யப்படும்.

6. இணைப்பில் உள்ள வருவாய் காண்பிக்கும் சான்றிதழுக்கு அரசு அங்கீகாரம் வழங்குகிறது.

7. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.105/ஜேஎஸ்(எஸ்.எப்)/2000 நாள்.10.7.2000 இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நா. ஆதிமூலம்,

அரசுச் செயலாளர்,

பெறுநர்

தலைமைப் பொறியாளர் (வே.பொ) சென்னை-35.

மேலாண் இயக்குநர், தமிழ்நாடு வேளாண் பொறியியல் (ம) பணிக்கூட்டுறவு இணையம்,

சென்னை-17.

தலைமைக் கணக்காயர், சென்னை-18

தலைமைக் கணக்காயர், சென்னை-18 (பெயரில்)

தலைமைக் கணக்காயர், சென்னை-6

தலைமைக் கணக்காயர், சென்னை-35

சம்பளக் கணக்கு அலுவலர், (தெற்கு) சென்னை-35.

நகல்

தனிச் செயலர், முதலமைச்சரின் அலுவலம், சென்னை-9

நேர்முக உதவியாளர், வேளாண்மைத்துறை அமைச்சர் அலுவலகம், சென்னை-9

தனிச்செயலர், வேளாண்மைச் செயலர் அலுவலகம், சென்னை-9

நிதி (வேளாண்மை) துறை, சென்னை-9

/ஆளுநரின் ஆணைப்படி/

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்,